O.S.No. 229/2011
29.03.2021

வா.சா.1 திரு.மலைச்சாமி என்ற அழகன் த.பெ. சின்ன அழகன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

தாவா சொத்து பி.கே. அழகனுக்கு பாத்தியம் என்பதைக் காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டாவோ, கிரய ஆவணமோ தாக்கல் செய்யவில்லை, ஆனால் கிஸ்தி ரசீது தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்தின் புல எண் என்னவென்றால் 132/2 ஏ, 132/5 ஆகும். மேற்படி புல எண்களுக்கு தான் கிரய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றாலும், வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். மேற்படி புல எண் 132/2 ஏ என்று ஒரு புல எண்ணே இல்லை என்றாலும் நாங்கள் வேண்டுமேன்றே அந்த புல எண்ணை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றாலும், ஆவணத்தை உற்பத்தி செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல. பட்டா எண் 85 பி.கே. அழகன் பெயரில் புல எண் 132-2 ஏ/2 என்றுதான் உள்ளது என்றாலும் நான் தவறாக புல எண்ணை சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் நான்குமாலை தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ-1 ஆவணம் எங்கு வைத்து, எப்போது எழுதப்பட்டது அதற்கான முத்திரைத்தாள் எப்போது வாங்கப்பட்டது என்றால், அலங்காநல்லூரில் 1 ம்பிரதிவாதியும் நானும் சேர்ந்து வாங்கினோம், அங்குதான் எழுதப்பட்டது. எந்த தேதியில் பத்திரம் எழுதப்பட்டதோ அதே தேதியில் தான் முத்திரைத்தாள்கள் வாங்கினோம் என்றால் சரியல்ல, அதற்கு முன்னரே வாங்கினோம். வா.சா. 1 எழுதப்படுவதற்கு முன்பு சுமாராக எத்தனை நாட்களுக்கு முன்பாக கிரயம் குறித்து பேசினோம் என்றால் சுமார் 3 மாதங்களாக பேசி வந்தோம். அவ்வாறு கிரயம் பேசப்படவில்லை என்றாலும், 1 ம் பிரதிவாதி வா.சா.ஆ -1 ஐ எழுதி கொடுக்கவில்லை என்றாலும் என் பெயரில் ஏற்கனவே வாங்கப்பட்ட முத்திரைத்தாள்களை வைத்துக்கொண்டு இந்த ஒப்பந்தமான வா.சா.ஆ-1 எழுதப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ-2 ஆன சுவாதீன ஒத்தி பத்திரம் நானே உருவாக்கியது என்றாலும், அதில் போதிய முத்திரைத்தாள் கட்டணம் இல்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ -5 பத்திரம் நானே உருவாக்கியது என்றாலும் அதற்கும் போதிய முத்திரைத்தாள் கட்டணம் செலுத்தப்படவில்லை என்றாலும் சரியல்ல. 1 ம் பிரதிவாதி என்னுடன் எவ்வித ஆவணமும் ஏற்படுத்தவில்லை என்றாலும், அவ்வாறு அவர் ஒப்பந்தம் ஏற்படுத்தி இருந்தால் அந்த சொத்தின் அசல் கிரய பத்திரைத்தியோ அல்லது பட்டாவையோ என்னிடம் கொடுத்திருபபார் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ-1 கிரய ஒப்பந்ததத்தில் கண்ட சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் கிரய பாத்தியம் என்று சொன்னார், மூல பத்திரம் தருவதாகவும் சொன்னார். எனது சொத்து தாவா சொத்தில் இருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கும் என்றால் 10 அடி தூரத்தில் இருக்கும். எனது சொத்து பூர்வீக சொத்து என்றால் சரிதான். எனது தங்கைக்கும் 1 ம் பிரதிவாதிக்கும் திருமணமாகி எத்தனை வருடங்கள் இருக்கும் என்றால் 40 வருடங்கள் இருக்கும். என் தங்கையின் திருமணத்திற்கு பின்னர் நானும் 1 ம் பிரதிவாதியும் வழக்கிற்கு முன்புவரை நல்ல உறவு முறையில் தான் இருந்தோம் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி தனது திருமுணத்திற்கு முன்பே தாவா

O.S.No. 229/2011
29.03.2021

வா.சா.1 திரு.மலைச்சாமி என்ற அழகன் த.பெ. சின்ன அழகன்

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

சொத்தை உழுது வருகிறார் என்றால் சரிதான், 25 வருடங்களாக உழுது வருகிறார், கிரய ஒப்பந்தத்திற்கு பிறகு 10 வருடங்களாக நான் உழுது வருகிறேன். நான் தாவா சொத்தை உழுது வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தங்கையின் திருமணத்தின் போது 1ம் பிரதிவாதியின் தந்தை உயிருடன் இருந்தாரா என்றால் இல்லை, அவருடைய அம்மாதான் இருந்தார். 1ம் பிரதிவாதியின் தாய் அப்போது 1ம் பிரதிவாதிக்கு உதவியாக விவசாயம் செய்தார் என்றால் சரியல்ல, அவர் வயதானவர். தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு பூர்வீக பாத்தியமானது என்றாலும், அவரிடம் மட்டும் நான் கிரய ஒப்பந்தம் போட்டது செல்லாது என்றாலும் சரியல்ல, அது அவர் கிரயம் வாங்கிய சொத்தாகும். வா.சா.ஆ-1 கிரய ஒப்பந்தத்தில் தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு கிரய பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டதா என்றால் சரியல்ல. வா.சா.ஆ-1ல் கண்ட சொத்து 1வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்பதால் நான் இந்த வழக்கில் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.